நாள்: 06.01.2024
OS. 8/2019
பெயர் பாக்கியலட்சுமி
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு எழுதப்படிக்க தெரியும். 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகி 30 ஆண்டுகள் ஆகிவிட்டது. என் கணவர் பெயர் பழனிவேல் ராஜன் ஆகும். அவருக்கு அழகாபுரி சொந்த ஊர் ஆகும். எனக்கு 3 குழந்தைகள் உள்ளார்கள். அவர்கள் அழகாபுரியில் தான் படித்து வருகிறார்கள். எனக்கு திருமணம் ஆன நாள் முதல் நான் அழகாபுரியில் தான் குடியிருந்து வருகிறேன். 1ம் பிரதிவாதி ஓய்வு பெற்ற ஆசிரியர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எங்கு ஒய்வு பெற்றார் என்று எனக்கு தெரியாது. சீப்பாலக்கோட்டையில் வேலை பார்த்து வந்தார். என் தாயார் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாது என்பதால் தான் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். என் தாயார் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் பணத்திற்காக தாக்கல் செய்துள்ளார். என் தாயார் புரோ நோட்டு அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். என் தாயாருக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்ட பிறகு தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார்கள். பிரதிவாதிகள் என்ன எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் வீடு சின்னமனூரில் எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகளுக்கு எத்தனை ஆண், பெண் மக்கள் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகளை நான் நேரடியாக பார்த்தது இல்லை என்றால் சரியல்ல பார்த்துள்ளேன். என் அண்ணன் வீட்டில் பார்த்துள்ளேன். தற்சமயம் அடையாளம் காட்ட முடியுமா என்றால் முடியாது. பிரதிவாதிகளை எனக்கு தெரியாது.

2) பூதநாராயணத்தேவர் எனது தந்தை என்றால் சரிதான். என் தந்தை வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். கடமலைக்குண்டை சேர்ந்த நாராயண சாமி மகன் வைகுண்ட சாமியை எனக்கு தெரியும். என் தகப்பனார் இறந்தவுடன் என் அண்ணன் பழனிச்சாமி தான் குடும்ப வரவு செலவுகளை பார்த்து வந்தார் என்றால் சரிதான். என் தாயார் கடமலைக்குண்டு, கனரா வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளார். என் தாயாரின் வங்கி கணக்கு எண் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கு எண் எனக்கு தெரியாது. ஜனவரி 2018 வரை பிரதிவாதிகள் 1402.50 பைசா செலுத்தியதாக பிராதில் செலுத்தியுள்ளதாக என் தாயார் சொல்லியுள்ளார்கள் அந்த வட்டி பணத்தை பிரதிவாதிகள் என் தாயாரிடம் நேரடியாக கொடுத்தார்கள். நான் 2018 ஜனவரி மாதம் என் தாயார் வீட்டிற்கு போயிருந்தேன். அப்போது எனக்கு தெரியும். அதன் பின்னர் என் அம்மா வாதி 1ம் பிரதிவாதியை சந்தித்ததாக கூறியுள்ளார் அவரை எங்கு வைத்து, எப்போது சந்தித்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் என் தாயார் சந்திக்க வில்லை. என் தாயார் ஆட்களை வைத்து பணத்தை கேட்டதாக சொல்லியுள்ளார் என்றால் அது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு வங்கி மூலம் என் தாயார் பணம் போட்ட விபரம் எனக்கு தெரியாது என்றால் தெரியும். நான் அப்பபோது என் தாயார் வீட்டில் இருந்தேன்.

3) என் தாயார் பணம் போட்ட விபரம் என் அண்ணன் பழனிவேலுக்கு தெரியும். பணம் போட்ட விபரம் எனக்கோ, என் தாயாருக்கோ தெரியாது என்றும் என் அண்ணன்

பழனிவேல் சொல்லிதான் தெரியும் என்றால் சரியல்ல. மேலும் தன் சாட்சியத்தில் பணம் போட்ட விபரம் என் அண்ணனுக்கு தெரியும் என சாட்சியம் அளிக்கிறார். துர்க்காதேவி என்பவர் என் அண்ணன் பழனிவேல் மனைவி என்றால் சரிதான். என் அண்ணி துர்க்காதேவி இந்த பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு 9/2019 தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயாருக்கும், பிரதிவாதிகளுக்கும் இந்த வழக்கு வரவு செலவுகளை தவிர வேறு பண வரவு செலவுகள் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரர் பழனிவேல் கடமலைக்குண்டு, கனரா வங்கியில் வங்கி கணக்கு உள்ளது என்றால் சரிதான். என் அம்மா தனியாக தொழில் ஏதும் செய்து வருகிறாரா என்றால் இல்லை. என் தாயாருக்கு தனிப்பட்ட முறையில் வருமானம் ஏதும் கிடையாது. **(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in the open Court and read over to the witness admitted by the witness to be correct.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2024.01.06 17:29:54 +0530

Sub Judge
Uthamapalayam.